

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 139 / 2017
தேதி : 21.11.2017

## புதிய பாடத்திற்கு ஏற்றவகையில் பள்ளிகளின் தரமும் உயர்த்தப்படவேண்டும்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

சுமார் 13 ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருந்துவந்த மேல்நிலைப்பள்ளி பாடத்திட்டமும், 7 ஆண்டுகளாக மாற்றப்படாமல் இருந்தவந்த உயர்நிலைப்பள்ளி வரையிலான பாடத்திட்டமும், தற்போது மாற்றப்பட்டு புதிய பாடத்திட்ட வரைவு வெளியிடப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் தமிழக பாடத்திட்டத்தில் பயின்ற மாணவர்களின் செயல்திறன் மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது என்ற வகையிலும், நீட் தேர்வு உருவாக்கிய அழுத்தமும் தற்போதைய பாடத்திட்டத்தை மாற்றுவதற்கான அடிப்படையாக அமைந்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

மேலும் கடந்த சில ஆண்டுகளாக பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை சி.பி.எஸ்.இ பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்கின்ற ஆர்வமும், அதனால் தமிழகத்தில் உருவாகியுள்ள சி.பி.எஸ்.இ பள்ளிகளின் பெருக்கமும், தமிழக அரசு இனியும் காலம் தாழ்த்தாது பாடத்திட்டத்தை மாற்றுவதற்கும் தரம் உயர்த்துவதற்கும் இனியும் காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலையை உருவாக்கிவிட்டது என்றே கருதலாம்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

தற்போதைய மாற்றம் செய்யப்பட்ட பாடத்திட்டம், சி.பி.எஸ்.இ பாடத்திட்டத்திற்கு இணையான பாடத்திட்டம், என்றில்லாமல் அதற்கும் மேம்பட்ட பாடத்திட்டமாக உருவாக்க வேண்டியதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் குறுகிய காலத்தில் சி.பி.எஸ்.இ பாடத்திட்டம் மேம்படுத்தப்படுமேயானால், மீண்டும் தமிழக பாடத்திட்டம் பின்னுக்கு தள்ளப்படலாம்.

மாற்றப்பட்டிருக்கும் புதிய பாடத்திட்டத்திற்கு மாணவர்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டிய அதே நேரத்தில், அதற்கேற்ற வகையில் ஆசிரியர்களின் தரமும் உயர்த்தப்பட வேண்டும். புதிய பாடத்திட்டத்தை பின்பற்றும் தனியார் பள்ளிகள் தங்களிடம் இருக்கும் கட்டமைப்பு வசதிகளுக்கேற்ப விரைந்து தங்களை மாற்றிக்கொண்டு கல்விப்பணி ஆற்ற முடியும். ஆனால் அரசுப் பள்ளிகள் தங்கள் மாணவர்களை புதிய பாடத்திட்டத்திற்கு தயார் படுத்தும் விதமாக அரசு பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளையும், தரத்தினையும் உயர்த்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் எனது கருத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
**No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.**
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com